மலர் : 12 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 6

TVGM தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஏப்ரல் 2012**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2012 ஏப்ரல்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## நான் . . .
## உன்னிடத்தில் வந்து,
## உன்னை
## ஆசீர்வதிப்பேன்.

**யாத்திராகமம் 20 : 24.**

கர்த்தருடைய கிருபையினால் 21.02.2012 அன்று **பிஷப் ஜோசப் ஜெபமணி , திருமதி பிரேமா ஜெபமணி** அவர்கள் குடும்பமாக செங்கல்பட்டு – **மையூர் கிராமத்தில்** கட்டப்பட்ட ஜெபவீட்டை **தேவனுடைய நாம மகிமைக்கென்று** பிரதிஷ்டை செய்தார்கள்.

நன்றி : Yishun Evangelical Church Singapore.



( மற்றும் அரக்கோணம், மதுரை ஜெபவீடுகள் பிரதிஷ்டை உள்பக்கம் . . . )

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்





**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TASOL ஸ்தாபகர்
**Cell : 94449 80445**
100village@tvgm.org

P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**
jesus100villages@yahoo.com

*கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே !*

*உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் ஈஸ்டர் வாழ்த்துக்கள் !*

*கர்த்தருடைய கிருபையினால்* TVGM *ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு, 29.04.2012 உடன் 33 வருடங்கள் முடிவடைகிறது. தலைமைத்துவம் மாற்றப்பட்டு 01.05.2012 உடன் 8 வருடங்கள் முடிவடைகிறது. கர்த்தர் இதுவரையிலும் கிருபையாக காத்து, வழிநடத்தினார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.*

*கர்த்தருக்குச் சித்தமானால், 2012 ஏப்ரல் 29 , 30 , மே 1 ஆகிய மூன்று தினங்களில்* TVGM *தலைமை அலுவலகத்தில்* TVGM *முழுநேர ஊழியர்கள், அறிமுகப்பணியாளர்கள், 100-கிராம ஊழியர்கள் மற்றும் தலைமை பொறுப்புள்ளவர்கள் அனைவரும் கூடி ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்க ஒழுங்கு செய்துள்ளோம்.*

TVGM*க்காக ஜெபிக்கிற , கொடுக்கிற பிள்ளைகள் இந்த ஸ்தோத்திர ஜெபத்தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம். இனிவரும் நாட்களில் நாம் செய்ய வேண்டிய ஊழியங்களையும், தரிசனங்களையும் கர்த்தர் புதுப்பித்து தர ஜெபியுங்கள்.*

TASOL *தரிசனத்திற்காக எடுக்கும் முயற்சிகளை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். குறிப்பாக மாணவர்கள் மத்தியில்* ***தலைமைத்துவ தரிசனம்*** *கொடுக்கப்பட கருத்தாய் ஜெபியுங்கள்.*

*கிறிஸ்துவின் பணியில்,*
***ஸ்டீபன் கிறிஸ்டோபர்***

**Date : 10.03.12**

# நான் . . . உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்.

யாத்திராகமம் 20 : 24

**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே ! ஊழியரே!**

இந்த மாதத்தில் கர்த்தர் கொடுக்கும் **வாக்குத்தத்தம் :**

**என் நாமத்தைப்**
**பிரஸ்தாபப்படுத்தும்**
**எந்த ஸ்தானத்திலும்**
***உன்னிடத்தில் வந்து உன்னை***
***ஆசீர்வதிப்பேன்.***

இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு மூன்று முக்கிய வழிகள் உண்டு.

**1. கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் (மத்.7:7)**

**2. கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்(லூாக்.6:38)**

**3. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் ( மத்.6 : 33 )**

ஆனால் ஒரு இடத்தில் மட்டும் **உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்** என்பதாக கூறுகிறார். **ஏன் ? இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துவதை தேவன்** மிக பிரதானமானதாக எண்ணுவதால், **அவர் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்** என கூறுகிறார். எத்தனை பெரிய ஆசீர்வாதம். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின தேவாதி தேவனே வந்து உன்னை ஆசீர்வதிப்பேன் என்கிறார்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலே மனுஷக்குமாரனாக ஜீவித்த நாட்களிலே அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து இவைகள் எப்பொழுது சம்பவிக்கும். உலகத்தின் முடிவுக்கும், உம்முடைய வருகைக்கும் அடையாளம் என்ன ? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள் **( மத்தேயு 24 : 3 ).**

அப்பொழுது இயேசுகிறிஸ்து **மத்தேயு 24 : 4 – 13** வரை **பின்வரும் காரியங்களை ஒவ்வொன்றாக கூறுகிறார் :**

1. அநேகர் வந்து என் நாமத்தை தரித்துக் கொண்டு, **நானே கிறிஸ்து** என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள்.

2. யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்.

கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்கப் படவேண்டியதே. **ஆனாலும் முடிவு உடனே வராது.**

3. ஜனத்திற்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்திற்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்.

4. பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.

இவைகள் **வேதனைக்கு ஆரம்பம்.**

5. உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து கொலை செய்வார்கள்.

6. என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.

7. அநேகர் இடறலடைந்து ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

8. அநேக கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள்.
9. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.
10. முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.

என்பதாக பல காரியங்களை கூறிவிட்டு கடைசியாக இயேசு கூறின வார்த்தையாவது,

**மத்தேயு 24 : 14 "ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோக மெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங் கிக்கப் படும்; அப்பொழுது முடிவு வரும். "**

என் சகோதரனே, சகோதரியே ! மீண்டுமாக ஞாபகப்படுத்துகிறேன்.

ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப் படும்; அப்பொழுது முடிவு வரும்.

இயேசுகிறிஸ்துவின் வருகை வரவேண்டுமானால் நாம் சுவிசேஷத்தை அனைவருக்கும் அறிவிக்க வேண்டும்.

**இயேசு கூறுகிறார் :**

**லூக்கா 24 : 46 – 48** எழுதியிருக்கிறபடி **கிறிஸ்து** பாடுபடவும், **மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும்** வேண்டியதாயிருந்தது.

அன்றியும் **மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும்** எருசலேம் தொடங்கி, சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.

**நீங்கள் இவைகளுக்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள்.**

**எவைகள் பிரசங்கிக்கப்பட வேண்டும் ?**

**இயேசுகிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்தார். மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார்.**

இந்த **நற்செய்தி** எல்லா ஜாதிகளுக்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

நீங்கள் மனந்திரும்பியிருக்கிறீர்களா ? பாமன்னிப்பை பெற்றிருக்கிறீர்களா ? ஆம், என கூறுவீர்களேயானால் இந்த **இயேசுகிறிஸ்து கல்வாரிச் சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த் தெழுந்த இந்த நல்ல செய்தியை** உங்கள் ஊரிலும், தெருக்களிலும், குடும்பங்களிலும் அறிவிக்க நீங்கள் ஒரு சாட்சி என்பதை மறந்து போகக் கூடாது.

**பக்தன் பாடுகிறார் :**

**எனக்காக மரித்தார்**
**எனக்காக உயிர்த்தார்**
**எனக்காக மீண்டும் வருவார்**

இதுவே அந்த நற்செய்தி ஆகும்.

இயேசு சிலுவையிலே சிந்தின அந்த இரத்தம் பாவமன்னிப்பை அளிக்கும் என்ற நற்செய்தி நாலுதிசையிலும் பரவ நீங்களும், நானும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**நாம் இயேசுகிறிஸ்துவை ஏன் அறிவிக்க வேண்டும்?**

**1. கட்டளை ( மாற்கு 16 : 15 )**

நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்.

இதுவே இயேசுகிறிஸ்துவின் இறுதி பிரதான கட்டளையாகும்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் கொடுக்கும் கட்டளையாகும். இந்த பரம கட்டளையை ஏற்று எத்தனை பேருக்கு இயேசுவின் நாமத்தை அறிவித்துள்ளீர்கள் ?

ஒரு நாளைக்கு ஒருவருக்காவது சுவிசேஷத்தை கைபிரதி மூலமாகவோ அல்லது சாட்சி மூலமாகவோ அறிவிக்க வேண்டுமென்ற **ஒரு தீர்மானத்தை இன்றே எடுத்துக் கொள்வோம்.**

## 2.கடன் ( ரோமர் 1 : 14, 15 )

கிரேக்கர்களுக்கும் மற்ற அந்நியர் களுக்கும் நான் **கடனாளி**யாயிருக் கிறேன். ஆகையால் ரோமாபுரியிலிருக் கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க விரும்புகிறேன்.

**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன்.**

பவுல் கூறுகிறார் சுவிசேஷத்திற்கு நான் கடனாளி. நாம் எவ்வளவு துாரம் கர்த்த ரிடத்தில் ஆசீர்வாதம் பெற்றிருக்கி றோமோ அந்த அளவிற்கு சுவிசேஷத் திற்கு கடன்பட்டவர்களாயிருக்கிறோம்.

மனந்திரும்பினவர்கள் , **மனந்திரும்பாத வர்களுக்கு கடன்பட்டவர்கள்.**

இரட்சிக்கப்பட்டவர்கள் , **இரட்சிக்கப் படாதவர்களுக்கு கடன்பட்டவர்கள்.**

அபிஷேகம் பெற்றவர்கள், **அபிஷேகம் பெறாதவர்களுக்கு கடன்பட்டவர்கள்.**

**நீங்கள் எந்த ஆசீர்வா தத்தைப் பெற்றிருக்கிறீர்களோ, அதைப் பெறாதவர்களுக்கு கடன்பட்ட வர்கள்.**

ஆதலால் உங்களால் இயன்ற மட்டும் இயேசுவின் சுவிசேஷத்தை அறிவியுங்கள்.

சுவிசேஷத்தை பிரசங்கிப்பது என்றால் ஏதோ மேடையில் நின்று பிரசங்கிப்பது மட்டுமல்ல, ஒரு தனிப்பட்ட நபரோடு ஒரு சில வார்த்தைகள் தேவன் உங்களுக்கு செய்த நன்மையையும், அவருடைய புகழையும் கூறுவதே ஒரு குட்டி பிரசங்கமாக மாறி விடுகிறது.

உங்கள் சபை முகவரியிட்ட கைபிரதியை கொடுக்க மறவாதீர்கள்.

இயேசுவின் அன்பை அறிந்த நீங்களும், நானும் இயேசுவை அறிமுகப் படுத்தாவிட்டால் யார் இந்த இயேசுவை அறிமுகப்படுத்துவார்கள்.

ஆதலால் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை **வெட்கப்படாமல்** மற்றவர்களுக்கு அறிவிப்போம்.

## 3.கடமை ( 1 கொரி. 9 : 16 )

சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும் மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; இது என்மேல் விழுந்த **கடமை**யாயி ருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கி யாதிருந்தால் எனக்கு ஐயோ !

பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டியது **என் கடமை** என்கிறீர்கள்.

பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பது **கடமை** என்கிறீர்கள்.

பிள்ளைகளுக்கு வீட்டை கட்டி வைப்பது **கடமை** என்கிறீர்கள்.

ஆனால் **சுவிசேஷத்தை பிரசங்கிப்பது என் கடமை** என்ற உள் உணர்வு உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் உள்ளதா ?

அப்படியில்லாவிட்டால் வேதம் சொல்கிறது "**எனக்கு ஐயோ**"

மீண்டும் மீண்டுமாக சொல்லிப் பாருங்கள். "**எனக்கு ஐயோ**"

இப்படி நீங்கள் சுவிசேஷத்தை அறிவிப்பது எனக்கு கொடுக்கப்பட்ட **தேவ கட்டளை, கடன், கடமை** என உணர்ந்து செயல்படுவீர்களேயானால் தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம் :

**உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்.**

பவுல் கூறுகிறார் : 2 கொரி. 5 : 14

**கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது.**

போதகர்களே ! உங்கள் சபையில் இந்த செய்தியை பிரசங்கியுங்கள்.

"**100–கிராம ஊழியம்**" பத்திரிகை வாசகர்களே ! இந்த செய்தியை ஜெராக்ஸ் எடுத்து உங்கள் சபை விசுவாசிகளுக்கு அன்பளிப்பாக கொடுங்கள்.

**தேவனுக்கே மகிமை**

P.T.Christopher - Founder.
Tamil Village Gospel Mission
100 - Village, Trichy - 620 102.
Cell : 94435 44628 Web : tvgm.org
Email : jesus100villages@yahoo.com

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## நாமக்கல் மாவட்டம் - பள்ளிபாளையம் யூனியன்

## 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2012 ஏப்ரல் 9** திங்கள் காலை **9** மணி முதல் **ஏப்ரல் 13** வெள்ளி இரவு **10** மணி முடிய **பள்ளிபாளையம் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2012 ஏப்ரல் 9** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2012 ஏப்ரல் 13** வெள்ளி இரவு **7 - 10** மணி

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் -** TVGM

C/o. **ஷாலோம் ஜெபவீடு,**

**பள்ளிபாளையம் , நாமக்கல், செல் :** 97872 46115

கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை ஏற்று உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் ஜான் ஒயிட்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

***பிரயாணப்படி* :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, **அனுமதி தபால்** பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

***முக்கிய அறிவிப்பு* :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

***சகல தொடர்புகளுக்கும்* :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,

**100 - கிராமம்,** சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102. **Web: tvgm.org**

**Ph : 0 - 431 - 2607241 , 94449 80445 Email : 100village@tvgm.org**

***தேவை* :** *ஒரு மாதம் 10,000* வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க ரூ.75000 தேவைப்படுகிறது. கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் தாங்க முன்வாருங்கள்.

# காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்போரூர் யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

## தேதி : 13 .02. 2012 முதல் 17.02.2012 முடிய



கர்த்தருடைய கிருபையினால் காஞ்சிபுரம் – **திருப்போரூர்** யூனியனில் 13.02.2012 திங்கள் முதல் 17.02.2012 வெள்ளி வரை **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு ஆகியவற்றை களிப்பட்டுர் சமத்துவநகர் **I.P.C.** சபையின் சார்பில் **மூப்பர் நோவா ஆண்டியப்பனும்**, பார்சல் செலவுகளை **சகோ.சாம்ராஜ் –** ம் பொறுப்பேற்றார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 47 கிராம ஊழியர்கள் வந்து கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் திருப்போரூர் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் **I.P.C. சபையின் பாஸ்டர் ரஞ்சி** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.



இதன்பின் கிராம ஊழியர்களை **10** குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். சபையின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது. உணவுக்கு பின் கிராம ஊழியர்கள் கிராமங்களுக்குள் சென்றார்கள்.

இவர்கள் கிராமங்களில் கிடைக்கிற இடங்களில் தங்கிக் கொண்டு, **5** நாட்களில் கிராமங்களிலுள்ள வீடுகளை சந்தித்து, ஊழியம் செய்தார்கள்.



இந்த ஊழியத்தின்போது மொத்தம் 10,250 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 10,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள், 10,000 சிலுவைக்கொடிகள், 400 **'நம் மத்தியில் வாழ்ந்த அவர்'** புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டன. ஊழியத்தின் மூலம் **132** புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

கிராம ஊழியர்கள் 5நாட்கள் ஊழியங்களை முடித்து, மீண்டும் முன்புகூடிய I.P.C சபையிலேயே கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராம ஊழியத்தில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியை கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இந்த ஜெபத்தில் TVGM ஸ்தாபகர் சகோ. **P.T.கிறிஸ்டோபர்** அவர்கள் கலந்து கொண்டு ஊழியர்களை ஜெபத்தில் நடத்தினார்கள். **பாஸ்டர் தாமஸ்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். I.P.C சபையின் **பாஸ்டர் ரஞ்சி, மூப்பர் நோவா** ஆகியோர் நன்றி கூறி, கிராம ஊழியர்களுக்கு இனிப்பு பாக்கெட்டுகள் வழங்கினார்கள். TVGM சார்பில் பிரயாணப்படி வழங்கப்பட்டது. I.P.C சபையார் இரவு விருந்து கொடுத்து உபசரித்தார்கள். பின்பு அவரவர் தங்கள் ஊர்களுக்கு சந்தோஷமாக திரும்பி சென்றார்கள்.



## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 -சகோதரிகள் : அந்தோணிமேரி, எஸ்தர் கனகாம்புஜம், மெர்சிராஜ், முத்துலட்சுமி.**

எங்களுக்கு கொடுக்கப்பட்ட கிராமங்களில் சென்று வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து இயேசுவை அறிவித்தோம். யாவரும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். தேவையுள்ளவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 -சகோதரிகள் : மரியம்மாள், எஸ்தர்பேபி, ரெபேக்கா, மேரி மீனா, செல்லக்கனி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் சுவிசேஷப் புத்தகங்களை வாஞ்சையுடன் வாங்கினார்கள். ஒருசிலர் இப்படி வெயிலில் அலைகிறீர்களே ? சம்பளம் பத்தாயிரம் கிடைக்குமா ? என்று கேட்டு பரியாசம் பண்ணினார்கள். நாங்கள் சோர்ந்துபோகாமல் சுவிசேஷத்தை அறிவித்தோம். வியாதியஸ்தர் சிலருக்கு ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 -சகோதரிகள் : வசந்தா ஸ்டீபன், அன்னக்கிளி, கிளமெண்ட்ஸ்மேரி, கவிதா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் எந்த எதிர்ப்பும் இல்லாமல் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். ஜே.ஜே. நகர் பகுதியில் சிலர் எங்களை கேலி செய்தார்கள். அவர்களுக்கு இயேசுவின் சிலுவை மரணத்தைக் கூறியபோது, அமைதியாக போய் விட்டார்கள். ஒரு பெண்ணிடம் சுவிசேஷம் சொன்னபோது, அவள் எனக்கு இயேசுவை பிடிக்கும், சபைக்கு போவேன் என்றாள். மொத்தம் 658 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 -சகோதரிகள் : சாந்தகுமாரி, சீலா அம்மாள், லீலா, சாரதா.**

நாங்கள் சென்ற சிலோன் காலனியில் சுப்பிரமணியம் என்பவரிடம் சுவிசேஷம் சொன்னபோது அன்போடு ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவ சபைக்கு இனி போவதாகக் கூறினார். திருப்போரூர் காலனியில் உள்ள ஒரு கோவிலில் ஜனங்கள் கூட்டாக இருந்தார்கள். இவர்கள் நடுவில் இருந்த

பூசாரியிடம் கைபிரதிகளைக் கொடுத்து இதை படியுங்கள். இதில் ஒரு முத்து இருக்கிறது என்று சொன்னபோது அங்கி ருந்த மற்றவர்களும் கேட்டு வாங்கி னார்கள். இவர்களுக்கு இயேசுவின் அன்பு, சிலுவை மரணம், இயேசுவின் வருகையை கூறியபோது ஆர்வமாக கேட்டார்கள். அநேகர் தங்களுக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். மொத்தம் 1023 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 -சகோதரிகள் : பிச்சையம்மாள், எஸ்தர் சாலமோன், தேவபாக்கியம், எஸ்தர் எபிநேசர்.**

நாங்கள் சென்ற கிராமத்தில் ஒரு வீட்டில் யோவான் புத்தகம் கொடுக்க சென்றபோது, அங்கு ஒரு பெரிய கருப்பு நாய் இருந்தது. ஒரு பெண் ஓடி வந்து இந்த நாய் உங்களை ஒன்றும் செய்ய வில்லையே, இது யாரைப் பார்த்தாலும் கடிக்காமல் விடாது என்று சொன்னாள். கர்த்தர் எங்களை பாதுகாத்தார் என்று சொல்லி ஜெபித்தோம். மொத்தம் 1030 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 - சகோதரிகள் : கஸ்தூரி, கிருபா பழனியம்மாள், மரியாள், லூர்துமேரி.**

**தண்டலம்** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். எங்களால் அநேகர் ஆறுதலடைந்தார்கள். அநேக நோயாளிகளுக்கு ஜெபித்தோம். சில வாலிப பெண்களுக்கும் புத்தி சொல்லி இயேசுவின் நாமத்தில் ஜெபித்தோம். மதம் மாற்ற செய்ய வந்தீர்களா ? என்று கேட்டவரிடம் அய்யா இது மதமல்ல, ஆண்டவரின் அன்பின் செய்தி, நம்மை படைத்த கடவுளைப் பற்றியது எனக் கூறியபோது அவர் அமைதியாக யோவான் சுவிசேஷத்தை வாங்கிக் கொண்டார். மொத்தம் 650 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 -சகோதரிகள்: மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை, ஜோதிமணி**

**படூர்** ஊராட்சியிலுள்ள 8 கிராமங் களில் ஊழியம் செய்தோம். சுவிசேஷ புத்தகங்களை யாவரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். அநேகருக்காக ஜெபித்தோம். ஒரு வீட்டில் யோவான் புத்தகம் கொடுக்க சென்றபோது, அங்கிருந்த ஒரு நாய் கடிக்க ஓடி வந்தது. அங்கிருந்த ஒரு வாலிபன் அந்த நாயை தடுத்து நிறுத்தி பிடித்துக் கொண்டதால் எங்களை கடிக்கவில்லை. மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 -சகோதரிகள்: சாந்தி ஸ்டேன்லி, ரோணிக்கம், பால்தங்கம், அன்னாள்.**

நாங்கள் சென்ற கிராமத்தில் நரிக் குறவர்கள் கூட்டமாக வந்து எங்களிடம் ஜெபிக்கும்படி கேட்டார்கள். பிசாசு பிடித்திருந்த ஒரு பெண்ணை தூக்கிக் கொண்டு எங்களிடம் ஜெபிக்க வந்தார்கள். ஜெபித்த உடனே அந்தப் பெண் எழுந்து நடந்து சுகம் பெற்றாள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 -சகோதரர்கள்: தாஹாகனி, சூசைமாணிக்கம், செல்வராயர்பால், ஆபிரகாம்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து நற்செய்தியை அறிவித்தோம். சில வியாதி யஸ்தர்களுக்காக ஜெபித்தோம். எதிர்ப்பு இல்லை. மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 930 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 – சகோதரர்கள் : ஜெயக்குமார், அந்தோணி, ஸ்டீபன்ராஜ், மைக்கேல், செல்வராஜ்.**

நாங்கள் கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து ஒவ்வொரு வீட்டிலும் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். யாவரும் ஆர்வமுடன் வாங்கினார்கள். பிசாசு பிடித்திருந்த சிலருக்காக ஜெபித்தோம். கர்த்தர் விடுதலை கொடுத்தார். கமலா என்ற பெண்ணுக்கு இயேசுப் பற்றி கூறி ஜெபித்தபோது அவர் ஏற்றுக் கொண்டார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 930 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 – சகோதரர்கள் : யோசுவா, ஜோசப் முரளிதரன், பீட்டர், ஜெபமாலை, மகாராஜன்.**

எங்களுக்கு கொடுக்கப்பட்ட கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள், சிலுவைக்கொடிகள் இலவசமாக கொடுத்து **இயேசுவே மெய்யான கடவுள்** என்று அறிவித்தோம். அநேக நோயாளிகளுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 890 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

## முக்கிய ஜெபக்குறிப்பு

ஒவ்வொரு மாதமும் நடைபெறும் 100–கிராம ஊழியத்தில் கலந்து கொண்டு ஊழியம் செய்யும் கிராம ஊழியர்களின் மீது **கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பு இருக்கும்படியாக**, தேவன் இவர்களை கொண்டு கிராமங்களில் மகிமையான காரியங்களைச் செய்யும்படியாக கருத்தாய் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை



கர்த்தருடைய கிருபையால் திருச்சி மாவட்டம் – **மணச்சநல்லூர்** யூனியனில் 25.02.2012 அன்று C.S.I. **தூய லூக்கா ஆலயத்தில் "இயேசுவை விரும்புவோர் முகாம்"** நடைபெற்றது.

இம்முகாமிற்கு வரும்படி TVGM உடன் கடிதத்தொடர்பு கொண்டுள்ள புற மத நண்பர்களுக்கு அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டது. இதில் ஒரு சகோதரர் தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளோடு ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டார். இவர்களுக்கு இயேசுவைப் பற்றியும், தொடர்ந்து சபைக்கு செல்ல வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. C.S.I. ஆலயத்தின் மூப்பர் **கிறிஸ்துதாஸ்** அவர்கள் வந்திருந்தவர்களை விசாரித்து, ஜெபித்து மதிய உணவு வழங்கினார்கள். தேவனுக்கே மகிமை !

## 2012 ஏப்ரல் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : விருதுநகர்
யூனியன் : சிவகாசி
நாள் : 21.04.2012 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் M. ஜான்ராஜ்**
**கர்மேல் சர்ச்**
**காந்திரோடு,** பஸ் ஸ்டாண்ட் மேல்புறம்
**சிவகாசி – 626 130.**
**விருது நகர் மாவட்டம்.**

**கர்த்தரைத் துதியுங்கள் ! அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது !**

## TVGM ஆண்டு விழா
## சோமரசம்பேட்டை - திருச்சி

**தோற்றம் - 29.04.1979 புதிய தலைமைத்துவம் : 01.05.2004**

கர்த்தருக்குச் சித்தமானால் 2012 ஏப்ரல் 29 , 30 , மே 1 ஆகிய தினங்களில் TVGM முழுநேர பணியாளர்களும், 100–கிராம ஊழியர் களும் இணைந்து தேவனை துதிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

TVGM ஊழியத்தை ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் தாங்கி வருகிற பிள்ளைகள் இந்த ஸ்தோத்திர ஜெபத்தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

## 1 லட்சம் கைபிரதிகள் விநியோகம்

**ஒரிஸா :** தேவனுடைய கிருபையினால் ஒரிஸாவில் 1 லட்சம் கைபிரதிகள் 2011ம் ஆண்டில் ICRM, Market Umberalla Ministry மற்றும் OVGM மூலம் கொடுத்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். இதனுடைய முழு தேவைகளையும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் மூலம் அற்புதமாக சந்தித்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

மீண்டுமாக 1 லட்சம் கைபிரதிகள் ஒரியா மொழியில் பிரிண்ட் செய்ய வாஞ்சித்து ஜெபித்து முயற்சித்து வருகிறோம்.

**நாக்பூர் :** மகாராஷ்டிராவிலுள்ள **நாக்பூரை** மையமாக வைத்து 2011 டிசம்பர் 7ம் தேதி **இந்தி, மராட்டி** மொழிகளில் 231 பேரை கொண்டு Vision India சகோ. விஜய் மொகட் மூலம் விநியோகிக்க கர்த்தர் கிருபை செய்தார். கைபிரதி அச்சடிக்கும் தேவையை கர்த்தர் சந்தித்தார். ஆனால் விநியோகச் செலவு உத்தேசமாக ரூ. 40,250/– இதுவரை சந்திக்கப்படவில்லை. கர்த்தர் தமக்கு சித்தமானவர்களைக் கொண்டு பற்றாக்குறையை நிவிர்த்தி செய்ய ஜெபியுங்கள். உதவுங்கள் !

## யோவான் சுவிசேஷப் புத்தகம்

கர்த்தருடைய கிருபையினால் மாதந்தோறும் சராசரியாக 12000 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் ஆலயமில்லாத கிராமங்களில் வீட்டிற்கு ஒன்று வீதம் “100 கிராம ஊழியர் ” மூலம் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

2012 மார்ச் முதல், ஒரு யோவான் புத்தகத்தின் விலை ரூ. 2 என உயர்த்தப் பட்டுள்ளது.

உங்களால் இயன்ற அளவு யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் கிராமங்களில் இலவசமாக விநியோகிக்கப்பட உதவி செய்யுங்கள்.

## கன்னியாகுமரி மாவட்ட
## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2012 பிப்ரவரி மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பிப்ரவரி மாத ஊழியங்களை கர்த்தர் அதிசமாக நடத்தினார். சத்துரு பலவிதங்களில் தடைகளை ஏற்படுத்தினாலும் கர்த்தருடைய பலத்த கரம் எங்களோடிருந்து ஜெயம் பெற வைத்தது. **புல்லுவிளை** ஏ.ஜி. சபையில் TVGM ஸ்தாபகர் P.T. கிறிஸ்டோபர் அவர்கள் ஒரு ஞாயிறன்று தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளவும், ஒரு சிறிய அறிமுகப்பணியைச் செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். தெங்கம்புதூர் சி.எஸ்.ஐ. சபையிலும் அதே நாளில் ஸ்தாபகர் அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். நாங்கள் TVGM தரிசனப்பாடல் பாடி தேவனை மகிமைப்படுத்தினோம். நமது ஊழியங்களை தாங்கி வரும் குடும்பங்களிலிருந்து ஜீவனுள்ள சாட்சிகளை கேள்விப்பட்டு தேவனைத் துதித்தோம். சுவிசேஷ ஊழியமும் **வாத்தியார்விளை, அருகுவிளை** பகுதிகளில் நடைபெற்றது.

2003 ஆம் ஆண்டு **இராஜாக்கமங்கலம்** யூனியனில் **"100–கிராம ஊழியம்"** செய்தபோது மிகவும் எதிர்ப்பாக இருந்த புல்லுவிளைச் சுற்றியுள்ள கிராமங்களில் பொறுப்பாக பின்தொடர்பணி செய்ய புல்லுவிளை ஏ.ஜி.சபை போதகர் **Rev. சோபன்** அவர்களது சபையார் முன் வந்துள்ளதால் இந்நாட்களில் அங்கு ஒரு திறந்தவாசல் காணப்படுவதாக அவர்கள் மூலம் அறிந்ததால், மீண்டும் சுவிசேஷப் பணியும், பின்தொடர்பணியும் செய்ய ஜெபித்து ஆயத்தப்படுகிறோம். தாங்களும் ஜெபியுங்கள். ஜெபமே ஜெயம் ! தேவனுக்கே மகிமை !

**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**N.ஷோபனா இவாஞ்ஜலின்**
செல்: **98658 26424**
போன் : 04652 - 277251

**TVGM தலைமை அலுவலகம்**
போன் : 0431 - 2607241 செல் : 94449 80445 , 94435 44628
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

## TVGM இம்மானுவேல் சிறுவர் இல்லம் - குண்டல்

2012 பிப்ரவரி மாதம் முழுவதும் கர்த்தர் சிறுவர் இல்லப் பிள்ளைகளை பாதுகாத்து நடத்தினார். தேவைகளை அற்புதமாக சந்தித்தார். விசேஷமாக சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு உணவளித்த **திருமதி சாந்தா ஜான்** ( பெங்களூர் ) அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆண்டு இறுதித் தேர்விற்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் நமது பிள்ளைகளுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தைக் கொடுக்கும்படியாக ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை !

கிறிஸ்துவின் பணியில்
**சகோ. G. மனோகரன் – ஆசிரியர் , மானேஜர் D. ரெத்தினம்**

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சி கடிதங்களின் சில வரிகள் !

**சகோதரி பாப்பா, சிவகங்கை.**

தாங்கள் அனுப்பிய பத்திரிகையின் டிசம்பர் மாத வாக்குத்தத்தம் **'உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும்'** என்ற வசனத்தின்படி என் உள்ளத்தில் மகிழ்ச்சி பிறந்தது.

**சகோ. செல்வமணி, மதுரை.**

தங்களுடைய பத்திரிகையை வாசித்து கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டேன்.

**சகோதரி கிருஷ்ணவேணி, நாகை.**

எனக்கு விடுபட்ட வேலை கிடைத்தால் காணிக்கை அனுப்புவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தருடைய கிருபையினால் வேலை கிடைத்தது. காணிக்கை ரூ.500/– அனுப்பியுள்ளேன். தேவனுக்கே மகிமை.

**சகோ. செல்வராஜ், சேலம்.**

2012 பிப்ரவரி மாத பத்திரிகையில் **'இனி நீ அழுதுகொண்டிராய்'** என்ற வசனம் என் மனதிற்கும், குடும்பத்திற்கும் ஆறுதலாய் இருந்தது.

**சகோதரி போதும்பொண்ணு, புதுகை**

**'இனி நீ அழுதுகொண்டிராய்'** என்ற வசனத்துடன் அனுப்பிய பிப்ரவரி மாத பத்திரிகை பயனுள்ளதாய் இருந்தது.

**சகோ. வீரபாண்டியன்,மதுரை.**

தாங்கள் அனுப்பிய வேதபாடத்தின் மூலம் ஆண்டவரின் ஆசீர்வாதத்தையும், அவர் சத்தியமுள்ளவர் என்பதையும் அறிந்து கொண்டேன்.

## விசுவாசிகள் எழுதிய சாட்சி கடிதங்களின் சில வரிகள் !

**சகோதரி லீமாரோஸ், தஞ்சாவூர்.**

என் மார்பு பகுதியில் ஒரு கட்டி காணப்பட்டது. இதனால் மிகவும் வேதனைப்பட்டேன். மருத்துவரிடம் போய் காண்பித்தேன். கர்த்தரிடம் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ.ஞானசாமி, சென்னை.**

என் மகளுக்கு முதல் குழந்தை பிறந்து 4 வருடங்களாக குழந்தை இல்லாமலிருந்தது. இரண்டாவது ஆண்குழந்தை வேண்டுமென ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். அதே மாதத்தில் என் மகள் கர்ப்பந்தரித்தாள். தேவன் அழகான ஆண்குழந்தையை கொடுத்தார்.

**சகோ.பொன்ராஜ், கோவை.**

என் மகன் சாமுவேல்ராஜ் திருமணத்திற்காகவும், பேத்தியின் மேல்படிப்பிற்காகவும் ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். நீங்கள் ஜெபித்து **'நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்'** என்ற வசனத்தை எழுதியிருந்தீர்கள். கர்த்தர் மகன் திருமணத்தை ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார்.

**சகோதரி ஜெபமணி, இராமநாதபுரம்**

நான் வயிற்றுவலியால் வேதனைப்பட்டேன். மருத்து சாப்பிட்டும் குணமாக வில்லை. பிப்ரவரி மாதஇதழில் **'இனி நீ அழுதுகொண்டிராய்'** என்ற வாக்குத்தத்த வசனத்தை படித்ததும் மனதிற்கு ஆறுதலாக இருந்தது.

## பார்வையற்றோருக்கு மாதாந்திர உதவி !



பார்வையற்ற 4 குடும்பங்களுக்கு மாதந்தோறும் ரூ. 250 வீதம் சிறுஉதவி கொடுக்க ஆரம்பித்துள்ளோம்.

உங்கள் குடும்பத்தின் சார்பாக இந்த காணிக்கையை கொடுக்க தேவனால் ஏவப்பட்டால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

கர்த்தருடைய கிருபையினால் 2012 ஜனவரி 1ம் தேதி 25 பார்வையற்றோருக்கு சிறுதொழில் செய்ய ரூ.2000/– வீதம் TVGM பொதுநிதியிலிருந்து முன் பணமாக வழங்கப்பட்டது.

இதுவரை 14 பேருக்கு உதவி செய்ய கர்த்தருடைய பிள்ளைகள் முன் வந்து காணிக்கை அனுப்பியுள்ளார்கள். தேவனைத் துதியுங்கள். மீதியுள்ள 12 பேரை பொறுப்பேற்க கர்த்தருடைய பிள்ளைகள் தேவை.

**அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள். மத்.**9:37,38.

**முழுநேர ஜெபவீரர்கள்** : TVGM தலைமை அலுவலகம் – சோமரசம்பேட்டையில் தங்கியிருந்து தேசங்களுக்காக, TVGM ஊழியங்களுக்காக ஜெபிக்க ஆத்தும பாரமுள்ள முழுநேர **ஜெபவீரர்கள் தேவை.**

**தன்னார்வ ஜெபவீரர்கள்** : திருச்சி வட்டாரங்களிலிருந்து, TVGM தலைமை அலுவலக **சிற்றாலயத்திற்கு** வந்து, TVGM ஜெபக்குறிப்புகளை பெற்று ஒரு மணி நேரமோ அல்லது சில மணி நேரங்களோ தனித்து ஜெபிக்க **தன்னார்வ ஜெபவீரர்கள்** வரவேற்கப்படுகிறார்கள்.

### அறிமுகப்பணியார் ( திருச்சி / நாகர்கோவில் )

1. **திருச்சி – சோமரசம்பேட்டை** தலைமை அலுவலகத்தில் தங்கியிருந்து அருகிலுள்ள ஊர்களில் கிறிஸ்தவ குடும்பங்களை சந்தித்து, TVGM பணிகளை அறிமுகம் செய்யவும், அவர்களின் குடும்பங்களுக்காக ஜெபிக்கவும் ஜெப பாரமுள்ளவர்கள் தேவை.
2. நாகர்கோவில் TVGM அறிமுகப்பணி அலுவலகத்தில் தங்கியிருந்தோ அல்லது வெளியிலிருந்து வந்தோ அறிமுகப்பணி செய்ய ஜெப பாரமுள்ளவர்கள் தேவை.

### TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் , அலுவலகப் பணியாளர்கள் , உல்லாச பயணம் – பெங்களூர் – நாள் : 2012 மே 2 செவ்வாய்

சிறுவர் இல்லப் பிள்ளைகளையும், அலுவலகப் பணியாளர்களையும் உற்சாகப் படுத்தும் வகையில் இந்த பிரயாணம் ஒழுங்கு செய்யப்படவுள்ளது. இதன் தேவை உத்தேசமாக ரூ. 50,000/-. ஜெபியுங்கள். உற்சாகப்படுத்துங்கள்.

**Form IV** Statement about ownership and other particulars about newspaper **"HUNDRED VILLAGE MINISTRY"** to be published in the first issue of every year after last day of February.

**1. Place of Publication :** Somarasampettai

**2. Periodicity of its Publication :** Monthly

**3. Printer's Name :** Mr. Stephen Christopher **Nationality : Indian**
**Address :** T.V.G.M Publication Printers, C/o T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.

**4. Publisher's Name :** Mr. Stephen Christopher **Nationality : Indian**
**Address :** T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.

**5. Editor's Name :** Mr. Stephen Christopher **Nationality : Indian**
**Address :** T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.

**6. Names and addresses of individuals :** No

T.V.G.M. Publication Trust

I, Stephen Christopher hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sd

**Date: 10.03.2012** **Signature of Publisher**

# TVGM குறுகிய கால சீஷத்துவ வேதாகம பயிற்சி

**2012** ஏப்ரல் 25 முதல் மே 31 முடிய, திருச்சி – சோமரசம்பேட்டையில் கடிதத் தொடர்பு ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்ட புறமத நண்பர்கள் இருபாலருக்கும் வேதாகம வகுப்புகள் நடத்தப்படும்.

தங்குமிடம், உணவு, படிப்பு இலவசம். ஒழுங்கும் கிரமுமாக வேதபாடம் கற்றவர்களுக்கு 2012 மே 31 ம் தேதி சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம் பெற ரூ 10 மட்டும் TVGM தலைமை அலுவலகத்திற்கு ( உங்கள் முகவரியுடன்) அனுப்பி வையுங்கள்.**

உங்கள் சபை போதகரின் சிபாரிசு கடிதத்தையும், இணைத்து அனுப்புங்கள். **வயது, படிப்பு கவனிக்கப்படுவதில்லை.**

# TVGM ஏலீம் சிறுவர் இல்லம்



இதுவரை கட்டி முடிக்கப்பட்ட வேலைக்காக கர்த்தரைத் துதியுங்கள். இன்னும் கட்டி முடிக்க வேண்டிய வேலைகள் மிக அதிகமாக உள்ளது. ( சமையலறை , ஸ்டோர் , சாப்பிடும் அறை, மருத்துவ அறை, வாசகசாலை ) ( உத்தேசமாக 3140 சதுர அடி ).

1 சதுர அடிக்கு சராசரியாக ரூ. 1000/– தேவை. உங்களால் இயன்ற அளவுக்கு உதவி செய்ய அன்புடன் அழைக்கிறோம்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

**"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்". 1தெச.** 5:17

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள் :*** 2012 ஆம் வருடம் அக்டோபர் 23 – 27 வரை **மிஷன் இந்தியா** மூலம் **டெல்லி**யில் நடைபெறும் **மாணவர் எழுப்புதல் முகாமுக்காக** ஜெபியுங்கள். ஒவ்வொருவருக்கும் **சிலுவைக் கொடி** வழங்க வாசல் திறக்கப்பட ஜெபியுங்கள். மேலும் இந்தியாவின் ஒவ்வொரு பிரதானமான மொழிகளிலும் **1 லட்சம் சுவிசேஷ கைபிரதிகள்** அச்சடிக்கப்பட்டு படிப்படியாக விநியோகிக்கப்பட ஜெபியுங்கள். மொழிபெயர்ப்பாளர்கள், அச்சக செலவுகள் மற்றும் விநியோக செலவுகள் அற்புதமாக சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

2011ம் ஆண்டில் **ஒரியா** மொழியிலும், **மராட்டி**யிலும், **இந்தி**யிலும் 1 லட்சம் கைபிரதிகள் அச்சடித்து வெளியிட செய்த தேவனைத் துதியுங்கள்.

***செவ்வாய் :*** TVGM ஊழியத்தின் மூலம் நடைபெறும் ஒவ்வொரு ஊழியங்களுக்கும் பொருளுதவியினால் தாங்கக் கூடிய ஸ்பான்சர்களை கர்த்தர் கிருபையாக எழுப்பும்படியாக ஜெபியுங்கள்.

**புதன் :** TVGM ஏலீம் சிறுவர் இல்ல Ground floor கட்டிடப்பணி தொடர்ந்து கட்டப்பட்டு பிள்ளைகள் வசதியாக தங்கியிருக்கவும், படிக்கவும் ஜெபியுங்கள்.

***வியாழன்:*** 100–கிராம ஊழியத்தில் புதிது புதிதாக தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொள்ளும்படியாகவும், நல்ல ஆத்துமபாரமுள்ள ஒருங்கிணைப்பாளர்களை கர்த்தர் இணைக்கவும் மாதத்தில் இரண்டு முறையாவது 100–கிராம ஊழியம் நடைபெற ஜெபியுங்கள்.

**வெள்ளி :** ஒரிசாவில் **நர்லா** கிராமத்தில் வாங்கப்பட்டுள்ள நிலத்திற்காக கர்த்தரைத் துதியுங்கள். பொருளுதவி செய்த **ஆடிட்டர் ஜான்** அவர்களுக்காகவும், **சகோதரி சாந்தா** அவர்களுக்காகவும் கர்த்தரைத் துதியுங்கள்.

தொடர்ந்து ஆராதனைக்கூடாரம் கட்டப்பட ஜெபியுங்கள். பின்வரும் நாட்களில் கர்த்தருக்குச் சித்தமானால், சிறுவர் இல்லம் அமைக்கப்பட ஜெபியுங்கள்.

உத்தேசமாக, ரூ. 5 லட்சம் இதற்கு தேவைப்படும் என எதிர்பார்க்கிறோம். படிப்படியாக கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

***சனி :*** 2011 – 2012 TVGM & TASOL வருட கணக்குகள் முடிக்கப்பட்டு, தணிக்கை செய்யப்பட்டு வருமான வரி மற்றும் ஹோம் மினிஸ்டிரிக்கு சமர்ப்பிக்கப்பட ஜெபியுங்கள்.

முக்கியமாக இந்த வருடத்தில் நமக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார பெரும் பற்றாக்குறையை கர்த்தர் 2012ம் ஆண்டு நிவிர்த்தி செய்து தர ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** சகோ.பி.டி.கிறிஸ்டோபர் டி.வி.ஜி.எம். ஸ்தாபகரை கர்த்தர் தமக்கு சித்தமான நாடுகளுக்கு கொண்டு போகவும், ஒவ்வொரு சபை விசுவாசிகளுக்கும் ஆத்தும தரிசன செய்தி கொடுக்கவும், அவரவர் தங்கள் சபையில் சுவிசேஷப் பணி செய்ய ஊக்குவிக்கவும் ஏற்ற வார்த்தைகளை கொடுக்க ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய

**TVGM தலைமை அலுவலக முகவரி**

BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**
"1OO-VILLAGE" SOMARASAMPETTAI
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628

| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, **ஜெபவீடு** கட்டுதல், முழுநேர ஊழியர் மற்றும் வட இந்திய ஊழியங்கள் – கைபிரதிகள், ஆலயம் கட்டுதல் | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian Money<br>SB. A/c : **12491010 -11947** Foreign Money<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| சிறுவர் இல்ல பிள்ளை–களின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், **மருத்துவ நிதி, தையற்மிஷின், தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி** | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian Money<br>SB. A/c : **12491010 - 24967** Foreign Money<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **TASOL**<br>**நிலம் வாங்குதல்**<br>**உயர் கல்வி நிதி** | **The Ambassador School of Learning - 80G** வரி விலக்கு<br>SB. A/c : **12491010 - 38110** Indian Money only<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **பத்திரிகை சந்தா**<br>**அச்சகம்** | TVGM Publication<br>SB. A/c : **12491010 - 25265** ( Indian Money)<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |

**குறிப்பு :** ஸ்தாபனம் பெயரில் காணிக்கைகளை அனுப்ப முடியாவிட்டால் Stephen Christopher S.B. A/c . No : **10848511949** State Bank of India Code : 930 Main Branch, Trichy, India. என்ற பெயரிலும் செக், டிராப்ட் எடுத்து அனுப்புங்கள்

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher
from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai,
Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers,
C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.
**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 066 / 2012 - 2014
Posting Date 25th at Trichy RMS

## TVGM ஏலீம் சிறுவர் இல்லம் - திருச்சி




2012 பிப்ரவரி மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு உணவளித்த **சகோ. Pirishvine, சகோதரி தமிழ்செல்வி, சகோதரி கோமதி, சகோதரி கிரேஸ் சுவாமி, சகோ. இருதயராஜ்** மற்றும் இனிப்பு வழங்கிய சகோ. சஞ்சிவி ஆகியோருக்கு நன்றி.




Emmaus Christian Gospel Mission ( இலங்கை ) **போதகர் தர்மபாலா** அவர்கள் 29.02.2012 அன்று TVGMல் நடைபெற்ற நடுஇரவு ஜெபத்தில் தேவசெய்தியளித்து, கர்த்தருடைய பந்தியை நடத்தினார்கள்.
தேவனுக்கே மகிமை !

To

Return Requested: Tamil Village Gospel Mission
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.